RNI-NO: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 128 | மே.15 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மகளிர் உரிமைத் தொகைத் திட்ட மறுசீரமைப்புக்கு அவகாசம் தேவை: முதல்வர் விஜய்

சென்னை: மே.15-

"பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது. ஆனால், மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும்." என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும்.

பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு



செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது. மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த பிப்ரவரி 13ம் தேதியன்று, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் பயனாளிகளான 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரத்தை விடுவித்தது அப்போதைய திமுக அரசு. அது மூன்று மாதத்துக்கான முன்பணம் மற்றும் கோடை கால சிறப்புத் தொகை என விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என அப்போதைய முதல்வர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்.

அதேபோல், அதிமுகவும் தனது தேர்தல் அறிக்கையில் தற்போது மகளிருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகை, ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

அந்தவரிசையில் தவெக தனது தேர்தல் அறிக்கையில் 65 வயது வரையிலான அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.2500 வரவு வைக்கப்படும் என்றது. இது பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், இப்போது பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது என்று கைவிரித்துள்ளது.

## "எங்களால் அதிமுக அலுவலகத்துக்கு எந்த பாதிப்பும் வராது" : சி.வி.சண்முகம்

சென்னை: மே.15-

"அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படாது. எங்களால் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது," என அதிமுக எம்எல்ஏ சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.



அதிமுகவில் உட்கட்சிப் பூசல் நிலவி வரும் நிலையில், அரசியல் களம் பரபரப்புடன் காணப்படுகிறது. இந்நிலையில், சி.வி.சண்முகம் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்த ரத்தம் அதிமுகவின் ரத்தம். எங்களுக்கு பல பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்த இயக்கம் அதிமுக.

சட்டப்படி அதிமுகவின் உண்மையான தொண்டன் என்பதை நிரூபித்ததன் பின்னரே என் கால் அதிமுக அலுவலகத்தில் பதியும். அதிமுக அலுவலகம் எங்கள் கோயில். அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படவோ, பாதிப்பு ஏற்படவோ அனுமதிக்க மாட்டோம். யாரும் அச்சப்பட வேண்டாம்" எனப் பேசினார்.

இதனிடையே, அதிமுக பிளவுபட்டுள்ள நிலையில், தங்கள் தரப்பு கொறடாவை அங்கீகாரம் செய்ய வேண்டும் என சட்டப்பேரவைத் தலைவரை இபிஎஸ் தரப்பு மற்றும் சி.வி.சண்முகம் தரப்பு தனித்தனியாக நேரில் சென்று மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக விஜய் நாராயண் பொறுப்பேற்பு

சென்னை, மே.15-

தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் இன்று காலை பொறுப்பேற்றுக் கொண்டார்.



கடந்த மாதம் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் தவெக அதிக இடங்களில் வென்று ஆட்சி அமைத்த நிலையில், திமுக ஆட்சியில் அரசின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்த பி.எஸ். ராமன் தனது பதவியை ராஜினாமா செய்ததால், அந்தப் பதவி காலியானது.

இந்த நிலையில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயணை தலைமை வழக்கறிஞராக நியமித்து, தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, இன்று காலை அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

## "திமுக மீண்டும் ஆட்சிக்கு வராமல் இருப்பதை உறுதி செய்ய உதயநிதி விரும்புகிறார்" : ஸ்ரீதர் வேம்பு

சென்னை: மே.15-

இந்து மதத்தை தாக்குவதன் மூலம் திமுக மீண்டும் ஆட்சிக் வராமலேயே இருப்பதை உறுதிசெய்ய உதயநிதி ஸ்டாலின் விரும்புகிறார். நித்தியமான அந்த சனாதன தர்மம் அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கட்டும் என்று ஜோஹோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை சபாநாயகராக ஜேசிடி பிரபாகர் தேர்வு செய்யப்பட்டதை அடுத்து, அவருக்கு வாழ்த்து தெரிவித்துப் பேசிய சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தனது உரையின் இறுதியில், "மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்" எனக் கூறி முடித்தார்.





உதயநிதி ஸ்டாலினின் இந்தக் கருத்துக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். அதேநேரத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக் உள்ளிட்டோர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து ஜோஹோ நிறுவனத்தின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அதில் அவர், "உதயநிதி ஸ்டாலின் தமிழில் சனாதனம் என்பதை திரும்பத் திரும்ப தாக்கிப் பேசும்போது, மிகுந்த மதப்பற்று கொண்ட தமிழ் இந்துக்களிடையே ஏன் அதிகப்படியான கொந்தளிப்பு ஏற்படவில்லை?

இதற்கு காரணம் மொழிதான் என்று நான் கருதுகிறேன்.

தமிழ் மொழியில் சனாதனம் (நித்தியமானது என்று பொருள்படும்) என்ற சொல் வழக்கமான பயன்பாட்டில் இல்லை. பெரும்பாலான தமிழ் மக்களுக்கு இந்த சொல் பற்றி தெரியாது. சிறுவயதில் எனக்கே கூட இச்சொல் பற்றி தெரிந்திருக்கவில்லை.

அதேநேரத்தில், தர்மம் அல்லது தருமம் என்ற சொல் மிகவும் பரவலாகப் புழக்கத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் தர்மபுரி என்ற பெயரில் ஒரு மாவட்டமே உள்ளது. மேலும், தர்மம் என்ற சொல்லுக்கு இணையான அதே பொருளில் தமிழில் அறம் என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது.

சுவாரஸ்மான விஷயம் என்னவென்றால் இந்தி மொழியில் தரம் (dharam) என்ற சொல் பொதுவாக மதம் என்பதையே குறிக்கிறது. அதன்படி, இந்து மதம் என்பது இந்து தரம் அல்லது சனாதன தரம் என்றும் கிறிஸ்தவ மதம் என்பது ஈசாய் தரம் என்றும் இந்தியில் அழைக்கப்படுகிறது.

ஆனால், தமிழ் மொழியின் பயன்பாட்டில் தர்மம் என்ற சொல் இந்தியில் குறிக்கப்படும் இந்து தரம் என்பதையே நடைமுறையில் உணர்த்துகிறது.

இப்போது உதயநிதி ஸ்டாலின் தமிழில் தர்மம் என்பதைத் தாக்கிப் பேசி இருந்தால் (தமிழில் அச்சொல் நடைமுறையில் இந்து மதம் என்பதையே குறிப்பதால்) அவர் அதர்மத்தைப் போதிப்பதாகக் கூறி பரவலான விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பார்.

அதனால்தான் அவர் தாக்குவதற்கு சனாதனம் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். ஏனெனில், அச்சொல் தமிழ் மக்களிடையே பரவலாக அறியப்பட்ட ஒன்றாக இல்லை.

தனது உண்மையான முயற்சிகள் அனைத்தின் மூலமாகவும் அவர் அச்சொல்லை தமிழ் மக்களிடையேயும் பிரபலப்படுத்தி வருகிறார். மேலும், தமிழ்நாட்டில் ஏற்கனவே வலுவாக இருந்த திமுகவுக்கு எதிரான வாக்குகளை அவர் இன்னும் அதிகப்படுத்தி உள்ளார். திமுகவுக்கு எதிரான அந்த பலத்த அலை காரணமாகவே அக்கட்சியால் இதுவரை எந்த தேர்தலிலும் தனித்து வெற்றிபெற முடிந்ததில்லை.

இந்து தெய்வங்கள் மீது அவர்கள் தொடர்ந்து தொடுத்து வந்த தாக்குதல்களின் மூலமாகவே திமுகவுக்கு எதிரான அந்த அலையை அவர்கள் உருவாக்கினார்கள். அதிமுக ஒருபோதும் அத்தகைய தாக்குதல்களை நடத்தியதில்லை. மாறாக, திமுகவுக்கு எதிரான அந்த அலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் அறுவடை செய்தார்கள்.

இப்போது திமுகவுக்கு எதிரான புதிய கட்சியாக தவெக உருவெடுத்துள்ள போதிலும், திமுகவுக்கு எதிரான வாக்குகள் அதிமுகவும் பிரித்துக்கொண்டபோதிலும், திமுக மிக அதிகமான பணத்தைச் செலவழித்திருந்தபோதிலும், திமுக வலுவான கூட்டணிக் கட்சிகளைக் கொண்டிருந்த போதிலும், தவெகவுக்கு எந்த கூட்டணியும் இல்லாத போதிலும் திமுக இந்த தேர்தலில் தோல்வி அடைந்துள்ளது.

திமுக மீண்டும் ஆட்சிக்கு வராமலேயே இருப்பதை உறுதி செய்ய உதயநிதி விரும்புகிறார். நித்தியமான அந்த சனாதன தர்மம், அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கட்டும்" என தெரிவித்துள்ளார்.

## சேலத்தில் தொடங்கப்பட்டது முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம்

சேலம்: மே.15-

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழக முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம் (Singappen Special Force SSF) சேலம் மாநகராட்சியில் நேற்று முதல் தனது பணியைத் தொடங்கியது. முதற்கட்டமாக, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பெண் காவலர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக முதல்வராக பதவி ஏற்றதும், முதல்வர் விஜய் பெண்கள் பாதுகாப்புக்கு என தமிழகத்தில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' தொடங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில் தமிழகத்தில் முதல்முறையாக சேலம் மாநகர காவல் துறையில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் , சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி மேற்பார்வையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" அமைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சூரமங்கலம் சரக உதவி ஆணையர் ரமளி ராமலட்சுமி கண்காணிப்பில், எஸ் ஐ., அருள்மொழி. எஸ் எஸ் ஐ., க்கள் அம்சவள்ளி, சத்தியவதி, பெண் தலைமை காவலர்கள் பிரேமலதா, மங்கையர்க்கரசி ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதிரடிப்படை வாகனத்தின் ஓட்டுநர் மட்டும் ஆண் காவலர் ஆவார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் (SSF) செயல்பாடுகள்:




குற்றச்சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து கண்காணித்தல், .பொது இடங்களில் தொடர்ந்து ரோந்து மேற்கொண்டு, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள். கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்வது.

சட்டவிரோத மற்றும் பெண்களுக்கு எதிரான செயல்களை தடுக்க விரைந்து நடவடிக்கை எடுப்பது, பெறப்படும் புகார்களுக்கு உடனடி மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது.

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் நபர்களை மீட்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வது, தேவையான உதவிகள் மற்றும் ஆதரவுகள் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்வது, சமூக நலத்துறை கல்வித்துறை மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது.

சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் இணைத்து பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுவது, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தடுப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகளை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படுவது, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் நோக்கங்கள் ஆகும். சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை முதற்கட்டமாக காவல்துறை தலைமையக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

இச்சிறப்பு படையினருக்கு தேவையான நான்கு சக்கர வாகனம் சாதனங்கள், Body Worn Camera மற்றும் இதர வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பணியை தொடங்கி வைத்த சேலம் மாநகர காவல் ஆணையர் அணில் குமார் கிரி அதிரடிப்படையினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்

பின்னர் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி செய்தியாளர்களிடம் பேசுகையில், "பெண்கள் பிரச்சினை தொடர்பாக புகார் செய்தால் அல்லது அவசர அழைப்பிற்கு தொடர்பு கொண்டால் உடனே சிங்கப்பெண் அதிரடி படை அங்கு சென்று தேவையான உதவிகள் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறினார்.




# சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா

மாதவரம், மே.15-

மாதவரம் தொகுதி பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகரில் அமைந்துள்ள சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2001ம் ஆண்டு முதல் 2004ம் ஆண்டு படித்த முன்னாள் மாணவர்கள் ஒருங்கிணைப்பில் பள்ளி தாளாளர் என்.ராஜன் தலைமையில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.ஆசிரியர் சங்கீதா அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். ஒருங்கிணைப்பாளர்கள் மணிவண்ணன், கருணாகரன், சரவணன், முத்துக்குமார், வினோத்குமார், காளிதாஸ், கைலாசம், பன்னீர்செல்வம், கஜலஷ்மி, சுதா,கார்த்திகா, கலையரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக பள்ளி செயலாளர் விஜயா, முதன்மை முதல்வர் சக்திமோகன், முதன்மை நிர்வாக அதிகாரி ரவிகோகுலநாதன், துணை முதல்வர் வாசுகி ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினர். இதனைத்தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பள்ளி நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து மரியாதை செய்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்ச்சியில் ரேவதி, மணிகண்டன் உள்ளிட்ட முன்னாள் மாணவர்கள் தங்களது பள்ளிக் காலநினைவுகளையும், தங்களது குடும்பத்தினரைப் பற்றியும் பகிர்ந்து கொண்டனர்.முடிவில் முன்னாள் மாணவிகள் ஷீலாஜோஸ், கலையரசி ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தாம்பரத்தில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற விசிக கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு அவர்களுக்கு உற்சாக வரவேற்பு

தாம்பரம் மே.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற விசிக கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் பொறியாளர் சாமுவேல் எபிநேசர் அவர்களின் வீட்டிற்க்கு வருகைதந்தார். அப்போது மாவட்ட செயலாளர் பொறியாளர் சாமுவேல் எபிநேசர் தலைமையில் வன்னி அரசு அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து விசிக நிர்வாகிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் சார்பில் சால்வை அணிவித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.இந்த





நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு வன்னி அரசு அவர்களுக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## ஊட்டியில் தொடங்கியது 21வது ரோஜா கண்காட்சி

# 70 ஆயிரம் ரோஜா மலர்களால் ஆன அன்னப்பறவை ஜோடி கவனம் ஈர்த்தது

ஊட்டி:மே,15-

ஊட்டி ரோஜா பூங்காவில் 21வது ரோஜா கண்காட்சி தொடங்கியது. 70 ஆயிரம் ரோஜாக்களால் ஆன அன்னப்பறவை ஜோடி பார்வையாளர்களைக் கவர்ந்தது. நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து வரும் நிலையில், ஆண்டுதோறும் நடைபெறும் கோடை விழாவின் முதல் நிகழ்ச்சியான 21வது ரோஜா கண்காட்சி இன்று ஊட்டி ரோஜா பூங்காவில் தொடங்கியது .கண்காட்சியை நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தொடங்கி வைத்து, பூங்காவில் அமைக்கப்பட்ட மலர் அலங்காரங்களை பார்வையிட்டார். இந்த ஆண்டு கண்காட்சியின் சிறப்பம்சமாக, ‘பறவைகளின் சொர்க்கம்’ என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 2 லட்சம் ரோஜா மலர்களால் பல்வேறு பறவை இனங்களின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக



70,000 ரோஜாக்களால் வடிவமைக்கப்பட்ட அன்னப் பறவை ஜோடி சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. மேலும், கழுகு, இருவாச்சி பறவை, புல் புல், பேரடைஸ் ஃபிளை கேச்சர், தூக்கணாங்குருவி, தேன் சிட்டு, மலபார் இருவாச்சி, நீலகிரி லாஃபிங் திரஷ் உள்ளிட்ட மொத்தம் 14 வகையான பறவை வடிவங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

கூடுதலாக, ‘ஆங்க்ரி பேர்ட்ஸ்’ போன்ற கார்டூன் வடிவங்களும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. பூங்கா முழுவதும் 4,310 ரகங்களைச் சேர்ந்த 33,000 ரோஜா செடிகள் பல்லாயிரக்கணக்கான வண்ணங்களில் பூத்து குலுங்கி சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் வகையில் அமைந்துள்ளது.கண்காட்சி தொடங்கிய முதல் நாளிலேயே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து கண்டு ரசித்து வருகின்றனர். கடந்த ஆண்டு 3 நாட்கள் நடந்த ரோஜா கண்கா ட்சி, இந்த ஆண்டில் 5 நாட்கள் நடைபெறவுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் வருகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

# உதகை ரோஜா பூங்காவில் 21வது ரோஜாகாட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்

உதகை மே,15-

இந்தியாவின் பழமையான மலைத்தொடர்களில் தலைசிறந்த சுற்றுலா தலமாக விளங்கும் மலைகளின் அரசி நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை கவரவும் அவர்களை உற்சாகப்படுத்தவும் வருடம் தோறும் கோடை விழாக்கள் தோட்டக்கலைத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு பூங்காவில் நடத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள அரசு ரோஜா பூங்காவில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் 21வது ரோஜா காட்சியானது நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்.இந்தாண்டு இரண்டு லட்சம் மலர்களை கொண்டு பறவைகளின்





சொர்க்கம் என்னும் கருப்பொருளில் பல்வேறு பறவைகளின் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுமார் 70000 அன்னப்பறவைகள் பெரும் கட்டமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இருவாச்சி பறவை. கழுகு, வரித்தலை வாத்து, அரசவால் குருவி இமயமலை கொண்டைக் குருவி, தேன் சிட்டு, தீக்காக்கை, நீர் மேல் வெட்டிப் பறவை மற்றும் தூக்குனாங்குருவி கூடு போன்ற பறவைகளின் வடிவமைப்புகளும் குழந்தைகளைக் கவரும் வகையில் Angry Bird மற்றும் Tweety Bird பறவைகளின் வடிவங்களும் Selfie Spot வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர பூங்காவில் உள்ள ஐந்து படிமட்டங்களிலும் 4301 வகைகளில் 3300 ரோஜா செடிகளில் ரோஜா மலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. ரோஜா செடி வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு காட்சியின் நிறைவு விழாவில் சிறப்புபரிசுகள் வழங்கப்பட உள்ளது. கடந்த ஆண்டு ரோஜா காட்சியானது 3 நாட்கள் நடத்தப்பட்ட நிலையில் இவ்வாண்டு ஐந்து நாட்கள் நடத்தப்பட உள்ளது. எனவே கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வரக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.21வது ரோஜா காட்சியானது 14.05.2026 முதல் 18.05.2026 வரை பயணிகள் கண்டு ரசிக்குமாறு மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத் துறையின் சார்பாககே ட்டுக்கொள்ளபடுகிறது. இந்த ரோஜா கண்காட்சியில் நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

நீலகிரி மாவட்ட தோட்டகலை இணை இயக்குநர், உதகை நகர காவல் துணை கண்காணிப்பாளர், தோட்டகலை துறையினர் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.ஐந்து நாட்கள் நடைபெறும் ரோஜா கண்காட்யினை வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட சுற்றுலாப்பயணிகள்மற்றும் பொது மக்கள் கண்டு ரசித்தனர்





■ கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பாக நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ராமஜெயம், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள் / தணிக்கை) வடிவேலன்,தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# மலையில் தவறி விழுந்த பெண்ணுக்கு கால் முறிவு,தீயணைப்பு துறை வீரர்கள்மீட்டு, மருத்துவமனையில் அனுமதி

கிருஷ்ணகிரி, மே 15-

கிருஷ்ணகிரி அருகே மலையேறும் போது தவறி விழுந்த பெண்ணுக்கு கால் முறிவு ஏற்பட்ட நிலையில் தீயணைப்பு துறையினர் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.கிருஷ்ணகிரி மோகன்ராம் காலனியை சேர்ந்தவர் ஹாகிலா (32). இவர் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் கிருஷ்ணகிரி மலை மீது சுற்றிப் பார்க்க சென்றிருந்தார். நேற்று காலை 10 மணியளவில் மலையேறிய அவர்கள் மதியம் 12 மணியளவில் சென்றடைந்தனர்.அப்போது அங்குள்ள குகை மற்றும் தர்கா பகுதிகளை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது, ஹாகிலா எதிர்பாராத விதமாக தவறி விழுந்தார். இதில் அவருக்கு கால் முறிவு ஏற்பட்டது.இதுகுறித்து தகவல் அறிந்த கிருஷ்ணகிரி தீயணைப்பு நிலைய அலுவலர் அந்தோணி சாமி தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, ஸ்டெட்சரில் வைத்து ஹாகிலாவை மீட்டு மலையிலிருந்து கீழே கொண்டு வந்தனர். பின்னர் மாலை 5 மணியளவில் அவரை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# திருத்தணி கே.அரியின் கட்சிப் பதவி பறிப்பு: எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை

சென்னை:மே, 15-

சி.வி.சண்முகம் தரப்புக்கு ஆதரவு தெரிவித்த திருத்தணி கே.அரி கட்சிப் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்யின் தவெக கட்சி 108 இடங்களைக் கைபற்றி ஆட்சி அமைத்துள்ளது. இதனிடையே, பெருமான்மையை நிருபிக்க தவெக அரசுக்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று சட்டப்பேரவையில் நடைபெற்றது. இதில்



எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக எம்எல்ஏக்கள் 22 பேர் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு எதிராக வாக்களித்த நிலையில், சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி தலைமையிலான 25 எம்எல்ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் அதிமுக கட்சிக்குள் பெறும் குழப்பம் வெடித்தது.இதனிடையே, சி.வி.சண்முகம் தரப்பில் தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்த திருத்தணி கே.அரியின் கட்சிப் பதவி பறிக்கப்படுவதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்:" அதிமுக அமைப்புச் செயலாளர் பொறுப்பிலும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்ஜிஆர் மன்றச் செயலாளர் பொறுப்பிலும் இருக்கும் திருத்தணி கோ. அரி, எம்எல்ஏ இன்று முதல் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.” என்று கூறியுள்ளார்.

# கேரளாவில் பெட்ரோல், டீசல் விற்பனைக்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிப்பு

கேரளா:மே,15-

கேரளாவில் பெட்ரோல், டீசல் விற்பனைக்கு விற்பனைக்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு அதிகபட்சமாக 5000 ரூபாய்க்கு பெட்ரோலும், 200 லிட்டர் டீசல் மட்டுமே விற்பனை செய்யப்படும். கையிருப்பு நிலைக்கு ஏற்ப இந்த விற்பனை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளது

# விதிமுறைகள் மீறிய நாற்றுப்பண்ணைகளுக்கு அதிரடி நடவடிக்கை கிருஷ்ணகிரி, தர்மபுரியில் ரூ.2.30 லட்சம் மதிப்பிலான தென்னங்கன்றுகள் விற்பனைக்கு தடை

கிருஷ்ணகிரி, மே 15-

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் விதை விற்பனை உரிமம் பெறாமல் செயல்பட்ட நாற்றுப்பண்ணைகள் மீது விதைச்சான்று துறை அதிகாரிகள் அதிரடி ஆய்வு மேற்கொண்டு, ரூ.2.30 லட்சம் மதிப்பிலான தென்னங்கன்றுகள் விற்பனைக்கு தடை விதித்துள்ளனர். கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பழக்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்ய 84 நாற்றுப்பண்ணை உரிமையாளர்கள் முறையான விதை விற்பனை உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றனர். இங்கு தயாரிக்கப்படும் தென்னங்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் தமிழ்நாட்டின் பல்வேறு



மாவட்ட விவசாயிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு தரமான கன்றுகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, விதைச்சட்டம் 1966 மற்றும் விதைகள் (கட்டுப்பாட்டு) ஆணை 1983 ஆகிய சட்ட விதிமுறைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் விதைச்சான்று துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக, தர்மபுரி விதை ஆய்வு துணை இயக்குனர் நாகராஜன் தலைமையில் அதிகாரிகள் குழு கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் திடீர் ஆய்வு நடத்தியது. ஆய்வின்போது, இருப்பு பதிவேடு, கொள்முதல் ரசீது மற்றும் விற்பனை ரசீதுகளை முறையாக பராமரிக்காத சில நர்சரிகள் கண்டறியப்பட்டன. இதையடுத்து ரூ.2.30 லட்சம் மதிப்பிலான தென்னங்கன்றுகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது.மேலும், உரிமம் பெறாமல் செயல்பட்டு வந்த 14 நர்சரிகளுக்கு சட்டப்படி விளக்கம் கேட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. தேவையானால் நீதிமன்ற உத்தரவு பெற்று, உரிமம் பெறாத நர்சரிகளில் உள்ள பழக்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகளை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து விதைச்சான்று துறை அதிகாரிகள் கூறுகையில், “பழக்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றுப்பண்ணையாளர்கள் விதைச்சட்ட நடைமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும். உற்பத்தி மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட கன்றுகளின் விவரப்பட்டியல்கள், இருப்பு பதிவேடுகள் மற்றும் விற்பனை ரசீதுகள் கட்டாயமாக பராமரிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு தரமான நாற்றுகளை வழங்குவது மிக முக்கியம்” என்றனர்.

மேலும் விதை மற்றும் நாற்றுகள் விற்பனை உரிமம் பெற விரும்புவோர், தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்படும் விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தை அல்லது தங்கள் பகுதி விதை ஆய்வாளர்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## அண்ணனை இரும்பு கம்பியால் அடித்து கொன்ற தம்பி கைது: போதையில் வெறிச்செயல்

அறந்தாங்கி:மே,15-
போதையில் அண்ணனை இரும்பு கம்பியால் அடித்து கொன்ற தம்பி கைது செய்யப்பட்டார். புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அடுத்த கோட்டைப்பட்டினம் மீனவர் காலனியை சேர்ந்தவர் ரகுமான்கான்(45). இவரது தம்பி இதிரிஸ்(40). மீனவர்கள். இதிரிசுக்கு திருமணமாகவில்லை. குடும்ப பிரச்னை காரணமாக ரகுமான்கானை விட்டு அவரது மனைவி பிரிந்து சென்று விட்டார். சகோதரர்கள் இருவரும் கோட்டைப்பட்டினம் மீனவர் காலனி வீட்டில் ஒன்றாக வசித்தனர். இருவருக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளது. அடிக்கடி மது அருந்தி விட்டு வீட்டில் இருவரும் சண்டை போட்டு கொள்வார்களாம். நேற்று முன்தினம் இரவும் வழக்கம்போல் இரண்டு பேரும் அதிகமாக மது அருந்தி விட்டு போதையில் சண்டை போட்டுள்ளனர். அப்போது இதிரிஸ் அருகில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து ரகுமான்கான் தலையில் சரமாரியாக தாக்கினார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த ரகுமான்கான் அந்த இடத்திலேயே இறந்தார். தகவலறிந்து வந்த போலீசார் விசாரணை நடத்தினர். பின்னர் ரகுமான்கான் உடலை பிரேத பரிசோதனைக்கு மணமேல்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து இதிரிசை நேற்று கைது செய்தனர். பின்னர் அவரை புதுக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அங்குள்ள சிறையில் அடைத்தனர்



## கிருஷ்ணகிரியில் மேற்கு,கிழக்கு நகர திமுக சார்பில் தண்ணீர் பந்தல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி,மே,15-
கிருஷ்ணகிரி மேற்கு, கிழக்கு நகர திமுக சார்பில் கிருஷ்ணகிரியில் புதிய பேருந்து நிலையம் அருகே தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடந்தது. மேற்கு நகர செயலாளர் அஸ்லாம் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் பங்கேற்று தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர் ,மோர் பழங்கள்,குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார். இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், ஒன்றிய செயலாளர் விசி. மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## எஸ்ஐஆர் மூலம் நீக்கப்பட்டவர்கள் அரசு நலத் திட்டங்களை பெற முடியாது: மேற்கு வங்கம், பிஹார் மாநில அரசுகள் அறிவிப்பு

கொல்கத்தா/ பாட்னா:மே,15-
மேற்கு வங்கத்தில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதிய பாஜக அரசு கடந்த சனிக்கிழமை பதவியேற்றது. இந்த அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது.இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், “அரசின் அனைத்து சமூக நலத்திட்டங்களும் அவை 10 ஆண்டுக்கு முன் அல்லது 30 ஆண்டுக்கு முன் தொடங்கப்பட்டவையாக இருந்தாலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எனினும், இறந்தவர்கள், சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் அல்லது இந்தியர் அல்லாத எவரும் மேற்கு வங்க மக்களுக்கான நலத் திட்டங்களை பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள்” என்றார்.



இந்நிலையில் எஸ்ஐஆர் நடவடிக்கையின் கீழ் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை பெற முடியாது என்று மேற்கு வங்க அரசு அறிவித்துள்ளது. எனினும் எஸ்ஐஆர் நடவடிக்கையில் பெயர் நீக்கப்பட்டதற்கு எதிராக தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தவர்களுக்கு அதில் இறுதி முடிவு எடுக்கப்படும் வரை நலத்திட்ட உதவி தொடரும். அதன் பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க உணவு வழங்கல் துறை அமைச்சர் அசோக் கீர்த்தனியா கூறுகையில் “குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளவர்கள் அனைத்து அரசு திட்டங்களையும் பெறலாம். ரேஷன் அட்டைகள் சரி பார்க்கப்படும்” என்றார்.

இதுபோல் பிஹார் தலைநகர் பாட்னாவில், முதல்வர் சாம்ராட் சவுத்ரி கூறுகையில் “பிஹாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள், ரேஷன் பொருட்கள், பிற நலத்திட்டங்கள் உட்பட எந்தவொரு அரசு சலுகையையும் பெற முடியாது. இவர்களின் வங்கி பாஸ் புத்தகங்களும் உரிய காலத்தில் ரத்து செய்யப்படும்” என்றார்.பிஹார் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அசோக் சவுத்ரி கூறுகையில், “மாநிலத்தில் எஸ்ஐஆர் நடவடிக்கைக்கு பிறகு, ரேஷன் அட்டைதாரர்களில் இருந்து சுமார் 5 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்” என்றார்.

## வீட்டின் உரிமையாளர் போல நடித்து வேறு ஒருவரின் வீட்டை குத்தகைக்கு விட்ட ஐ.டி பெண் ஊழியர் கைது

சென்னை:மே, 15-
வீட்டின் உரிமையாளர் போல நடித்து, வேறு ஒருவரின் வீட்டை குத்தகைக்கு விட்டு பண மோசடி செய்த வழக்கில், ஐ.டி. பெண் ஊழியர் கைது செய்யப்பட்டார்.சென்னை, ஓட்டேரி பகுதியைச் சேர்ந்தவர் குமார ராஜா (54). குத்தகைக்கு வீடு தேடி கொண்டிருந்தார். அப்போது, சென்னை நம்மாழ்வார்பேட்டையைச் சேர்ந்த சங்கர் என்பவர் நம்மாழ்வார்பேட்டை, சுப்பராயன் மெயின் தெருவில் உள்ள வீடு ஒன்றை காண்பித்து, இந்த வீடு என்னுடையதுதான்.ரூ.4.5 லட்சத்திற்கு குத்தகைக்கு விட உள்ளதாக தெரிவித்தார். இதையடுத்து, குமாரராஜா கடந்த பிப். 13ம் தேதி குத்தகை ஒப்பந்தம் போட்டு, சங்கரின் வீட்டில் அவரது மகள் நந்தினி (25) முன்னிலையில் ரூ.4.5 லட்சம் கொடுத்தார்.பின்னர், சங்கர் வீட்டை ஒப்படைக்காமல் காலம் தாழ்த்தினார். அதன் பின்னர்தான், அந்த வீட்டின் உரிமையாளர் சங்கர் இல்லை என தெரிய வந்தது. இதையடுத்து, கொடுத்த பணத்தை திருப்பி கேட்டபோது, சங்கர் திருப்பி தரவில்லை.இதுகுறித்து, குமார ராஜா தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.இதில், பண மோசடி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, சங்கரின் மகள் நந்தினியை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விசாரணையில் நந்தினி ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்து வருவது தெரிய வந்தது. தலைமறைவாக உள்ள சங்கரை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## கேரள முதல்வராகிறார் வி.டி.சதீசன் காங்கிரஸ் தலைமை தேர்வு

புதுடெல்லி: மே,15-
கேரள காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் தலைவராக வி.டி. சதீசன் நியமிக்கப்படுவதாக காங்கிரஸ் தலைமை அறிவித்துள்ளது.காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் அஜய் மக்கான், முகுல் வாஸ்னிக், கேரள மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் தீபா தாஸ்முன்ஷி ஆகியோர் டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் (வியாழக்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய தீபா தாஸ்முன்ஷி, “காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மே 7ம் தேதி திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அதில், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவரை தேர்வு



செய்யும் பொறுப்பு காங்கிரஸ் தலைவருக்கு வழங்கப்படுவதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கேரள காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர், கேரளாவில் உள்ள காங்கிரஸ் மூத்த தலைவர்கள், எம்.பிக்கள் உள்ளிட்டோரிடம் காங்கிரஸ் ஆலோசனை மேற்கொண்டார். அனைவருடனும் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், வி.டி.சதீசன் கேரள காங்கிரஸ் சட்டமன்றக் குரு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்” என தெரிவித்தார். இதன்மூலம், கேரளாவின் அடுத்த முதல்வராக வி.டி. சதீசன் பதவியேற்க உள்ளார்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 140 தொகுதிகளில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) 102 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றது. இதில், காங்கிரஸ் 63 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து, கேரளாவின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சி தீவிரப்படுத்தியது.

காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்களான அஜய் மக்கான் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் கடந்த 7ம் தேதி திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதில், காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக அதாவது முதல்வராக யாரை தேர்ந்தெடுப்பது என்பது குறித்து ஒவ்வொரு எம்எல்ஏக்களிடமும் தனித்தனியே கருத்துகள் கேட்கப்பட்டன. இதையடுத்து, இந்த கூட்டத்தில் காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவரை தேர்வு செய்வதற்கான முழு அதிகாரத்தையும் காங்கிரஸ் தலைமைக்கு அளிக்கும் ஒருவரி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, கடந்த ஒரு வார காலமாக காங்கிரஸ் சட்டப்பேரவைக் குழு தலைவரை தேர்வு செய்வதற்கான ஆலோசனையில் கட்சித் தலைவர் கார்கே ஈடுபட்டு வந்தார். வி.டி.சதீசன், ரமேஷ் சென்னிதாலா, சன்னி ஜோசப், கே.சி. வேணுகோபால் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவி வந்ததால் முடிவெடுப்பதில் இழுபறி நிலவி வந்தது. இந்நிலையில், வி.டி. சதீசன், கேரள காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, விரைவில் அவரது தலைமையில் கேரளத்தில் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.






■ இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா இ.ஆ.ப., இராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இராணிப்பேட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள 79 தனியார் பள்ளிகளின் 480 பள்ளி வாகனங்களின் பாதுகாப்பை ஆய்வு செய்யும் வருடாந்திர ஆய்வுப் பணியினை தொடங்கி வைத்தார்கள். உடன் வருவாய் கோட்டாட்சியர் ராஜி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மோகன், முதன்மை கல்வி அலுவலர் மோகனா, துணை காவல் கண்காணிப்பாளர் கனகராஜ், இராணிப்பேட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் ராஜசேகர், வட்டாட்சியர் நடராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் முத்துக்குமார், செங்குட்டுவேல் மற்றும் பலர் உள்ளனர்.



## எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்து வாழ்த்து பெற்றார் M.G.M.ராமு

கிருஷ்ணகிரி,மே, 15-
கிருஷ்ணகிரி அதிமுக மேற்கு மாவட்ட செயலாளராக M.G.M.ராமு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமியை நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி, பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.இந்த சந்திப்பின் போது அதிமுக துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான K. P. முனுசாமி உடன் இருந்தார்.

## மதுரையில் கோலாகலமாக தொடங்கும் ‘கொங்கு நாட்டு உணவுத் திருவிழா’

மதுரை, மே,15-
மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் செயல்படும் ஓட்டல் தமிழ்நாடு அலகு2 மற்றும் ஓட்டல் தமிழ்நாடு அலகு 1 ஆகிய இடங்களில் மே 15 முதல் 17 வரை ‘கொங்கு நாட்டு உணவுத் திருவிழா’ கோலாகலமாக நடைபெற உள்ளது. கொங்கு மண்டலத்தின் பாரம்பரிய சுவைகளை அறிமுகப்படுத்தும் வகையில் நடைபெறும் இந்த உணவுத் திருவிழாவில், மதியம் 12.30 மணி முதல் 3.30 மணி வரை பல்வேறு பாரம்பரிய உணவுகள் பரிமாறப்பட உள்ளன. பெரியவர்களுக்கு ரூ.599 மற்றும் 6 முதல் 10 வயது குழந்தைகளுக்கு ரூ.299 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செயற்கை நிறமூட்டிகள் மற்றும் சுவையூட்டிகள் இன்றி, இயற்கை நறுமணத்துடன் கூடிய கொங்கு நாட்டு உணவுகள் தரமாக தயாரித்து வழங்கப்பட உள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. மதுரை மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் கலந்து கொண்டு இந்த உணவுத் திருவிழாவை அனுபவிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.மேலும், அழகர்கோயில் சாலை ஓட்டலில் குளிர்சாதன அறைகள், திருமண மற்றும் கூட்ட அரங்குகள், திறந்தவெளி நிகழ்ச்சி அரங்கு, குழந்தைகள் விளையாட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இருக்கைகள் முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள: 9176995841 / 6380699288.

## திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்ற மூவர் கைது!

திருவாரூர்: மே, 15-
திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் சட்ட விரோதமாக லாட்டரி விற்பனை செய்யப்படுவதாக காவல் துறையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் சோதனை மேற்கொண்ட போது மூன்று பேர் லாட்டரி விற்பனை செய்தது தெரியவந்துள்ளது எனவே அவர்களை போலீசார் கைது செய்தனர். இந்நிலையில் அவர்களிடமிருந்து 2 லட்சத்து 43 ஆயிரத்து 700 ரூபாய் ரொக்க பணமும் 160 லாட்டரி சீட்டுகளை காவல்துறை பறிமுதல் செய்தனர்.

திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையம் அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த மூன்று பேரை திருவாரூர் சிறப்பு எஸ்.ஐ. கார்த்தி தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் கிடைத்த தகவலின் பேரில் சேகர் என்பவற்றின் வீட்டில் போலீசார் சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு சட்டவிரோதமான லாட்டரி சீட்டுகள் மற்றும் பணம் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

மேலும் இந்த வழக்கில் தொடர்புடைய நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த சுபாஷ்சந்திரபோஸ், கலியபெருமாள், சத்தியசாமி மற்றும் பண்ணீர் செல்வன் ஆகியோர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து 4 செல்போன்கள், 3 ஏடிஎம் கார்டுகள் மற்றும் 10 வங்கி பாஸ்புக்குகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்

## தேனி மாவட்டம்மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடியநவீனப்படுத்தும்பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தேனி மே, 15-
தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிப்பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டத்தின் தலைநகராக உள்ள தேனி நகரின் பொழுதுபோக்கு அம்சத்திற்காகவும், பொதுமக்கள் நடைபயிற்சி செய்வதற்காகவும் மீறு சமுத்திரம் கண்மாயில் நடைபயிற்சி பாதை மற்றும்



பூங்கா அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.7.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மீறுசமுத்திரம் கண்மாயின் கரையை பலப்படுத்துதல், நடைபாதை, பூங்கா, தடுப்புச் சுவர், படகுகள் நிறுத்துமிடம், நுழைவுவாயில், அலுவலகக் கட்டடம், பாதுகாவலர் அறை, நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறை, சாய்வுதளம், அமரும் மேடை, உணவுக்கூடம் மற்றும் பாலம் அமைத்தல் மேலும், ஆகாய தாமரை அகற்றுதல், மரங்கள் நடுதல், பறவைகள் தீவு அமைத்தல், கண்காணிப்பு புகைப்படக் கருவி அமைத்தல், பூங்கா மின் வசதிகள் அமைத்தல், படகுகள் மற்றும் பூங்கா விளையாட்டு கருவிகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம், மேற்குறிப்பிட்ட பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வாய்வில், செயற்பொறியாளர் (மஞ்சளாறு வடிநிலக்கோட்டம்). சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், உதவி செயற்பொறியாளர் .சாலமோன் கிறிஸ்துதாஸ், உதவிப்பொறியாளர். அரவிந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் பொது மக்களுக்கு தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா

தாம்பரம் மே,15-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 4வது மண்டலம் 49வது வார்டு மார்கெட் பகுதி சண்முகம் சாலையில் உள்ள பாலகிருஷ்ணா ஸ்டோர் அருகில் 13/5/2026 புதன்கிழமை காலை 11 மணியளவில் பொது மக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், ரோஸ் மில்க், பழங்கள், வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி,மாநில மருத்துவ அணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி, தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவர் எஸ்.இந்திரன்மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகர பகுதி நிர்வாகிகள் இளைஞரணி மாணவரணி மகளிரணி வட்ட செயலாளர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# சிவன் சிலை உட்பட 5 சிலைகள் மாயம் பெண்கள் போராட்டம் கீழ்கட்டளையில் பரபரப்பு

கீழ்கட்டளை மே,15-
செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட கீழ்கட்டளை செல்லியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள திரௌபதி அம்மன், ஸ்ரீ மாரியம்மன் மற்றும் பெரியபாளையத்து ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் பரபரப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் கடந்த சுமார் 4 ஆண்டுகளாக சிவன் சிலை உள்ளிட்ட 5 சிலைகள் வைத்து பராமரித்து கும்பாபிஷேகமும் செய்து பக்தர்கள் வழிபட்டு வந்துள்ளனர். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு வழக்கம்போல் பூஜை நடத்திவிட்டு சென்ற நிலையில், திங்கட்கிழமை காலை பூஜைக்காக வந்தபோது சிவன் சிலை உட்பட 5 சிலைகள் காணாமல் போனது தெரியவந்தது.இதனால் அதிர்ச்சி அடைந்த பக்தர்கள் உடனடியாக கோயில் நிர்வாகத்திடம் தகவல் தெரிவித்தனர். அப்போது சிலைகளை எடுத்துச் சென்று முவரசம்பட்டு ஏரியில் வீசியதாக பொதுமக்கள் மத்தியில் தகவல் பரவியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பக்தர்கள், சிலைகளை மீண்டும் அதே இடத்தில் வைத்து வழிபாடு நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால் கோயில் நிர்வாகம் “நாளை பேசி முடிவு செய்யலாம்” என கூறி அங்கிருந்து சென்றதாக கூறப்படுகிறது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை மாலை வரை நிர்வாகிகள் யாரும் வராததால், சுமார் 60க்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். சிலை அகற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் கோஷங்கள் எழுப்பியதுடன், உடனடியாக சிலைகளை மீண்டும் நிறுவ வேண்டும் என்றும் வலியுறுத்தினர். சம்பவ இடத்தில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு பொதுமக்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர்.இந்த சம்பவம் தொடர்பாக சிவன் சிலை உட்பட 5 சிலைகளை யார் எடுத்துச் சென்றார்கள், எந்த காரணத்திற்காக அகற்றப்பட்டது என்பது குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.







# மானாமதுரையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026 2027ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை பாடப்பிரிவு மாணவர் சேர்க்கை

மானாமதுரை மே15-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2026 2027ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை பாடப்பிரிவு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணக்கர்கள் www.tngasa.com என்ற இணையதளம் மூலம் 07.05.2026 முதல் 29.05.2026 வரை விண்ணப்பிக்கலாம். இதனை அடுத்து மானாமதுரை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கை உதவி மையம் கல்லூரி முதல்வர் முனைவர்.வீ.கோவிந்தன் தலைமையில் தொடங்கப்பட்டுள்ளது. எனவே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை உதவி மையத்தை அணுகி இணையவழி வாயிலாக விண்ணப்பித்து உரிய ஆலோசனையை இலவசமாக பெற்று பயன்பெறலாம். மேலும் விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் உள்ளது என்பதையும் கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.



# வீட்டு மின் நுகர்வோருக்கு 200 யூனிட் இலவச மின்சாரம்

## தமிழக அரசு அரசாணை வெளியீடு

சென்னை, மே,15-
தமிழகத்தில் தகுதியுள்ள வீட்டு மின் நுகர்வோருக்கு இரு மாதங்களுக்கு ஒருமுறை 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்க தமிழக அரசு அதிகாரப்பூர்வ அரசாணை வெளியிட்டுள்ளது. முதலமைச்சரின் உத்தரவின்பேரில் எரிசக்தித் துறை இந்த அறிவிப்பை வெளியிட்டது.அரசாணையின் முக்கிய அம்சங்கள்:

இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகளுக்கு மிகாமல் மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோருக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும்.

இரு மாத மின் நுகர்வு 500 யூனிட்டுகளை கடந்தால், தற்போது நடைமுறையில் உள்ள கட்டண முறையே தொடரும். அதன்படி, அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 100 யூனிட் இலவச மின்சாரம் மட்டும் பொருந்தும்.இந்த புதிய திட்டத்தால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.1,730 கோடி கூடுதல் மானியச் சுமை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த உத்தரவு மே 10, 2026 முதல் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் பொருளாதாரச் சுமையை குறைக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# “பி.எம்.கிசான் பணம் தொடர வேண்டுமா?”

# மதுரையில் ஒரு மாதம் சிறப்பு முகாம் - 8 ஆயிரம் விவசாயிகள் இன்னும் பதிவு செய்யவில்லை!

மதுரை, மே,15-
மதுரை மாவட்டத்தில் பி.எம்.கிசான் திட்டத்தில் தகுதியான அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில், வேளாண்மைத் துறை, இந்திய அஞ்சல் துறை மற்றும் இசேவை மையங்கள் இணைந்து சிறப்பு முகாம்களை நடத்த உள்ளன. இந்த முகாம்கள் நாளை (15ம் தேதி) முதல் ஜூன் 15ம் தேதி வரை அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெறுகின்றன.

01.02.2019க்கு முன் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இதுவரை பி.எம்.கிசான் திட்டத்தில் பதிவு செய்யாமல் இருந்தால், இந்த முகாமில் பதிவு செய்து கொள்ளலாம். ஏற்கனவே உதவித்தொகை பெற்று வரும் விவசாயிகள், விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என அரசு அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் மட்டுமே 23வது தவணை நிதி வழங்கப்படும்.

மதுரை மாவட்டத்தில் தற்போது 8060 விவசாயிகள் இன்னும் விவசாயி அடையாள எண் பெறாமல் உள்ளனர். மேலும், 2778 விவசாயிகள் ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைக்காததுடன், 2934 விவசாயிகள் eKYC கைரேகை பதிவு செய்யாமல் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முகாம்களில் நில உடமை பதிவு, eKYC, விவசாயி அடையாள எண், ஆதார்(ரீ)வங்கி இணைப்பு மற்றும் மொபைல் எண் புதுப்பித்தல் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

தகுதியற்றவர்களிடம் கட்டணம் வசூலித்து பதிவு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் எச்சரித்துள்ளார்.



# தேர்தல் பணியில் சிறப்பாக செயல்பட்ட மானாமதுரை ஓட்டுநருக்கு காவல் கண்காணிப்பாளர் பாராட்டு

மதுரை மே, 15-
2026 தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக முன்னாள் படை அலுவலர்கள் (விசிபி) மற்றும் முன்னாள் படைவீரர்களை சிறப்பு காவலர்களாக அதிக அளவில் ஒருங்கிணைத்து வழங்கிய பணிக்காக, மதுரை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வரும் ரா. வெங்கடேஸ்வரன் பாராட்டுப் பெற்றுள்ளார்.

இவரது சிறப்பான சேவையை பாராட்டி, மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்தன் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.தேர்தல் காலத்தில் பாதுகாப்பு பணிகளை வலுப்படுத்தும் வகையில் முன்னாள் படைவீரர்களை திறம்பட ஒருங்கிணைத்த அவரது பணியை காவல்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். பாராட்டுச் சான்றிதழ் பெற்ற ரா. வெங்கடேஸ்வரன் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# குதிரை பேரம் நடத்த தவெகவுக்கு அவசியம் இல்லை: அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

சென்னை: மே,15-
குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் தவெகவுக்கு இல்லை. அதற்கான தேவையும் எழவில்லை என்று அமைச்சர் சிடிஆர். நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: முதல்வர் விஜய் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்று ஆதரவு தெரிவித்து 144 எம்எல்ஏக்கள் வாக்களித்துள்ளனர்.

எந்த நோக்கத்துக்காக மக்கள் விஜய்யை முதல்வர் ஆக்கினார்களோ, அந்த எண்ணம் நூறு சதவீதம் நிறைவேற்றப்படும். சட்டப்பேரவை தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. இந்த ஆட்சியில், அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் தொய்வின்றித் தொடரும்.

மற்ற கட்சித் தலைவர்களை சந்தித்தது போலத்தான் அதிமுக நிர்வாகிகளையும் விஜய் சந்தித்தார். இதில் குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை.

நீட் தேர்வில் கடந்த 5, 6 ஆண்டுகளாகவே தொடர்ந்து குளறுபடிகள் நடக்கின்றன. இதனால் லட்சக்கணக்கான மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடத்தப்பட்டாலும், நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு. ஒரு சாதாரண தேர்வைக் கூட மத்திய அரசால் சரியாக நடத்த முடியவில்லை.தேர்வர்களை மிகவும் சோதனைக்கு உட்படுத்தும் மத்திய அரசு, வினாத்தாள் கசிவை தடுக்க இயலாத நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கேரள முதல்வராக வேணுகோபாலை நியமிக்க எதிர்ப்பு போஸ்டர்கள் மூலம் எச்சரிக்கை

வயநாடு:மே,15-
கேரள முதல்வராக கே.சி.வேணுகோபாலை நியமித்தால், வயநாடு அமேதியாக மாறும் என்ற வாசகங்கள் அடங்கிய போஸ்டர்கள் வயநாடு தொகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.கேரள சட்டப்பேரவைத் தேர்தலில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றது. இதன்மூலம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இக்கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. தேர்தல் முடிவு வெளியாகி 10 நாட்களாகியும் இன்னும் முதல்வர் தேர்ந்தெடுப்பதில் இழுபறி நீடிக்கிறது. குறிப்பாக, கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், மூத்த தலைவர்களான வி.டி.சதீசன், ரமேஷ் சென்னிதாலா ஆகியோருடைய பெயர்கள் முதல்வர் பதவிக்கு பரிசீலிக்கப்பட்டன.இதில் கே.சி.வேணுகோபாலை முதல்வராக நியமிக்க கட்சித் தலைமை விரும்புவதாகக் கூறப்படுகிறது. இதற்கு ரமேஷ் சென்னிதாலா மற்றும் சதீசனின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதையடுத்து, கேரள முதல்வர் பதவிக்கான போட்டியை ஆதரவாளர்களுக்கு இடையிலான மோதலாக மாற்ற வேண்டாம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எச்சரிக்கை விடுத்தார். ஆனால், இதை யாரும் பொருட்படுத்தவில்லை.


கே.சி.வேணுகோபாலை முதல்வர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று ராகுல் மற்றும் பிரியங்கா காந்தியை எச்சரிக்கும் போஸ்டர்கள், பிரியங்கா காந்தியின் தொகுதியான வயநாட்டில் ஒட்டப்பட்டுள்ளன. "மிஸ்டர் ராகுல், கே.சி. (வேணுகோபால்) உங்கள் பையைத் தூக்குபவராக இருக்கலாம், ஆனால் கேரள மக்கள் உங்களை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்" என்று ஒரு போஸ்டரில் எழுதப்பட்டுள்ளது. "வயநாடு அடுத்த அமேதியாக மாறக்கூடும்" என்று மற்றொரு போஸ்டரில் எழுதப்பட்டுள்ளது.உத்தரபிரதேசத்தின் அமேதி தொகுதி காந்தி குடும்பத்தின் கோட்டையாக இருந்தது. இந்நிலையில், 2019ல் நடந்த மக்களவைத் தேர்தலில் இந்தத் தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தியைத் தோற்கடித்து பாஜகவின் ஸ்மிருதி இரானி வெற்றி பெற்றார். இதை நினைவுகூரும் வகையில் தான் இந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. உரிய பதவி தவிர வேறு எதையும் ஏற்கப் போவதில்லை என சதீசன் தெளிவுபடுத்தியுள்ளார். இது கட்சித் தலைமைக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

# மே14: பெட்ரோல் விலை 100.84, டீசல் விலை 92.39 க்கு விற்பனை!

சென்னை:மே,15-
பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை லிட்டருக்கு 100.84 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு 92.39 ஆகவும் நிர்ணயம், மற்றும் சிஎன்ஜி காஸ் விலை கிலோகிராம் 91.50 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது

# மானாமதுரையில் அருள்மிகு ஸ்ரீ நிரதலமுடைய அய்யனார் ஸ்ரீ சோணையையா சுவாமி கோவில் 119வது பொங்கல் பூஜை விழா

மானாமதுரை மே, 15-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஐந்து கரை குலாலர் (பூசாரிகள்) சமூக அமைப்பு சார்பில், அருள்மிகு ஸ்ரீ நிரதலமுடைய அய்யனார் மற்றும் ஸ்ரீ சோணையையா சுவாமி திருக்கோவிலின் 119வது ஆண்டு பொங்கல் பூஜை விழா வருகிற மே 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவையொட்டி மே 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 4 மணி முதல் ஸ்ரீ நிரதலமுடைய அய்யனார், ஸ்ரீ சோணையையா சுவாமி உள்ளிட்ட தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் கணபதி ஹோமம் நடைபெறுகிறது.மாலை 3 மணிக்கு குலாலர் தெரு சுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து பூஜை பெட்டிகள் மேளதாளங்கள் மற்றும் தப்பாட்டங்களுடன் ஊர்வலமாக புறப்பட்டு கோவிலை வந்தடையும். தொடர்ந்து இரவு 9 மணிக்கு மேல் பக்தர்கள் பூக்குழி இறங்குதல் நிகழ்ச்சி நடைபெற்று, பின்னர் பொங்கல் பூஜை மற்றும் மகா தீபாராதனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட கலைக்குழுவினரின் வானவேடிக்கை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.மே 23ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு குலாலர் தெரு பெண்கள் பூத்தட்டுகளுடன் ஊர்வலமாக வந்து சுவாமிக்கு சிறப்பு அர்ச்சனை செய்வார்கள். இரவு 10 மணிக்கு குலாலர் தெரு மின்னொளி கலை அரங்கில் “சின்னக்கருப்பு, பெரியகருப்பு” எனும் நாடக நிகழ்ச்சி நடைபெற உள்ளது. விழாவின் சிறப்பாக வெள்ளிக்கிழமை அன்று சுவாமி சந்தனக்காப்பு அலங்காரத்திலும், சனிக்கிழமை குதிரை வாகன அலங்காரத்திலும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.119வது ஆண்டு பொங்கல் பூஜை விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மானாமதுரை ஐந்து கரை குலாலர் சமூக அமைப்பினர் தீவிரமாக செய்து வருகின்றனர்.



Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161